# அருள்மிகு சிவன் கோவில்
# சைவத் தமிழ்ச் சங்கம்
## 26வது ஆண்டு கலைவாணிவிழா 2019

www.sivankovil.ch www.anpesivam.com www.sivantv.com

## 01.01.2007 – 31.12.2007

- தேவார மனனப்போட்டி.

பண் : நட்டராகம்

**பண்டு நால்வருக் கறமுரைத் தருளிப்பல் லுலகினில் உயிர்வாழ்க்கை**
**கண்ட நாதனார் கடலிடங் கைதொழக் காதலித் துறைகோயில்**
**வண்டு பண்செயு மாமலர்ப் பொழின்மஞ்ஞை நடமிடு மாதோட்டம்**
**தொண்டர் நாடொறுந் துதிசெய வருள்செய்கே தீச்சர மதுதானே.**

பொழிப்புரை:

முற்காலத்தில் நால்வர்க்கு அறம் உரைத்தருளிப் பல உலகங்களிலும் பிறந்துள்ள உயிர்களின் வாழ்க்கைக்குரிய ஊழை அமைத்தருளிய நாதனார், கடல் சூழ்ந்த இவ்வுலகிலுள்ளோர் கண்டு கைதொழுமாறு விரும்பி உறையும் கோயில், வண்டுகள் பண்ணிசைக்கும், சிறந்த மலர்கள் நிறைந்த பொழில்களில் மயில்கள் நடனமாடும் மாதோட்டத்தின்கண் தொண்டர்கள் நாள்தோறும் துதிக்க அருள் புரியும் கேதீச்சரமாகும்.

பண் : காந்தாரம்

**பூச வினியது நீறு புண்ணிய மாவது நீறு**
**பேச வினியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்**
**ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு**
**தேசம் புகழ்வது நீறு திருவால வாயான் திருநீறே.**

பொழிப்புரை:

திருஆலவாயான் திருநீறு, பூசுதற்கு இனிமையானது. புண்ணியத்தை வளர்ப்பது. பேசுதற்கு இனியது. பெருந்தவம் செய்யும் முனிவர்கட்கு ஆசையை அறுப்பது. முடிவான பேரின்பநிலையை அளிப்பது. உலகோரால் புகழப்படுவது.

- திருவாசக மனனப்போட்டி.

**பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே**
**பற்றுநான் மற்றிலேன் கண்டாய்**
**சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே**
**திருப்பெருந் துறையுறை சிவனே**
**யாரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்**
**ஆண்டநீ அருளிலை யானால்**
**வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்**
**வருகஎன் றருள்புரி யாயே**

பொழிப்புரை:

மண்முதல் விண் ஈறாகக் கலந்து விளங்கும், எமது மேலோனே! சிறப்பொடு விளங்குகின்றவனே! சிவலோகநாதனே! திருப்பெருந்துறையில் வாழ்கின்ற சிவபெருமானே! என்னை ஆண்டருளின நீயே அருள் செய்யவில்லை என்றால் நான் யாரோடு நொந்து கொள்வேன்? யாரிடம் இதை எடுத்துச் சொல்வேன்? நான் வேறு பற்றுக் கோடு இல்லேன். நெடிய கடல் சூழ்ந்த இவ்வுலகில் வாழ ஒருப்படேன்: என்னை வருவாய் என்று அழைத்து அருள் செய்வாயாக!

**தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்**
**சங்கரா ஆர்கொலோ சதுரர்**
**அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்**
**யாதுநீ பெற்றதொன் றென்பால்**
**சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்**
**திருப்பெருந் துறையுறை சிவனே**
**எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்**
**யான்இதற் கிலன்ஓர்கைம் மாறே**

.

பொழிப்புரை:

எனது சித்தத்தையே, திருக்கோயிலாகக் கொண்டு எழுந்தருளிய எம் தலைவனே! திருப்பெருந்துறையில் வீற்றிருக்கும் பெருமானே! எம் தந்தையே! ஈசனே! எனது உடலை இடமாகக் கொண்டவனே! சங்கரனே! எனக்கு நீ கொடுத்தது உன்னை அதற்கு ஈடாக என்னை நீ ஏற்றுக் கொண்டாய் யான் முடிவு இல்லாத பேரின்பத்தை அடைந்தேன். ஆயினும் நீ என்பால் பெற்றது என்ன? ஒன்றும் இல்லை. இக்கொள்ளல் கொடுத்தல்களைச் செய்த நம் இருவரில் திறமையுடையவர் யார்? இவ்வுதவிக்கு நான் ஒரு கைம்மாறும் செய்ய முடியாதவனாயினேன்.

- திருமந்திர மனனப்போட்டி.

**பின்னைநின் றென்னே பிறவி பெறுவது**
**முன்னைநன் றாக முயல்தவம் செய்திலர்**
**என்னைநன் றாக இறைவன் படைத்தனன்**
**தன்னைநன் றாகத் தமிழ்செய்யு மாறே .**

பொழிப்புரை:

முற்பிறப்பில் நன்கு முயல்கின்ற தவத்தைச் செய்யாதவர், பின்னை நற்பிறவியைப் பெறுதல் எவ்வாறு கூடும்! கூடாது. ஆகவே நான்செய்த தவம் காரணமாக இறைவன் என்னைத் தன்னைத் தமிழ்மொழியால் நன்றாகப் பாடும் வண்ணம் செவ்விய முறையால் படைத்தான்.

**மனவாக்குக் காயத்தால் வல்வினை மூளும்**
**மனவாக்கு நேர்நிற்கில் வல்வினை மன்னா**
**மனவாக்குக் கெட்டவன் வாதனை தன்னால்**
**தனைமாற்றி ஆற்றத் தகும்ஞானி தானே.**

பொழிப்புரை:

உயிர்களின் மனமும், வாக்கும், காயமும் நேர்முறையில் செயற்படாது, கோடும் முறையில் செயற்பட்டால் உயிர்கட்கு, நீக்குதற்கரிய வலிய வினைகள் உளவாகும். அவை அவ்வாறின்றி, நேர்முறையில் செயற்பட்டால் அவ்வாறான நிலைமை ஏற்படாது. (எனினும் அஞ்ஞானமுடையவர்களது மனோவாக்குக் காயங்கள் நேர்முறையிற் செயற்படமாட்டா). இனி ஒருவன் அஞ்ஞானத்தின் நீங்கிமெய்ஞ்ஞானத்தைப்பெற்று, மனோ வாக்குக் காயங்களின் பிடியில் அகப்படாது விடுபட்டானாயினும், பழைய வாசனை காரணமாக ஒரோவழி அவை தம்மியல்பில் வந்து அவனைத் தாக்குதல் கூடும். அப்பொழுது அவன் தற்போதத்தை நீக்கிச் சிவபோதத்தை உடையவனாய் அவற்றைச் செயற்படுத்தினால், அவன், ''ஞானி'' என்னும் நிலையினின்று நீங்கான்.

- திருக்குறல் **நன்காம் அதிகாரம்**

- பேச்சுப்போட்டி **“ஆறுமுகநாவலர்”** சுயதேடல்.

அன்பார்ந்த பெற்றோர்களே!

உங்கள் பிள்ளைகளை இப்போட்டிகளில் பங்குகொள்ள வைப்பதன் மூலம் பிள்ளையின் தமிழறிவு, சமயஅறிவு, பண்பாடு, தமிழ் சமூகத்துடனான தொடர்பு என்பன வளர்ச்சியடையும். எனவே பரிசில்களை விட பங்குபற்றும் திறமையும், ஆர்வமும் மேலானது.